Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
In the Court of Judicial Magistrate No.I Cuddalore.

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.No. 570/2025 |
| Police station | : | Naduveerapattu P.S |
| Deposition of witness for Prosecution | : | Additional Witness / PW 2 |
| Name | : | திரு.ராஜேந்திரன் (உதவி ஆய்வாளர்) |
| Father Name/Husband Name | : | |
| Village | : | |
| Cuddalore | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873, விதிமுறைகளின் படி 28.07.2026 நாளாகிய இன்று SELVI.R.SRINITHI BA. LL.B(HONS) LL.M நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, கடலூர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

( எதிரி ஆஜரில் இல்லை. கு.வி.நடைமுறை சட்டம் பிரிவு 355 BNS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது).

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது நடுவீரப்பட்டு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். CMP.No- /2026, அனுமதிக்கப்பட்டதின்பேரில் என்னுடன் பணி செய்த உதவி ஆய்வாளர் ரவிச்சந்திரன், என்பவரின் கையெழுத்து எனக்கு நன்கு பரிட்சயம் எனவே வழக்கின் கோப்பினை பார்வையிட்டு ஆவணங்கள் அடிப்படையில் இந்த சாட்சியம் அளிக்கிறேன்.

கடந்த 15.07.2023 ம் தேதி நடுவீரப்பட்டு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளர் பாஸ்கரன் நிலைய பொறுப்பில் இருந்த போது அன்றைய தினம் 22.00 மணிக்கு பத்திரக்கோட்டை மாரியம்மன் கோவில் தெருவைச் சேர்ந்த உத்ராபதி மகன் ராஜசேகர் (வயது -32) என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார்

மனுவை பெற்று வழக்கு பதிவு செய்து நிலைய குற்ற எண்.176/2023-ல் சட்டப்பிரிவுகள் 341, 294(b), 352, 506(2) இதச படி வழக்கு பதிவு செய்து கணினி முதல் தகவல் அறிக்கை தயார் செய்தார்.கணினி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் உடன் புறப்பட்டு சம்பவயிடம் சென்று 16.07.2023 ந் தேதி காலை 8.00 மணிக்கு சம்பவயிடத்தை பார்வையிட்டு சாட்சிகள் வெங்கடேசன், பரசுராமன் ஆகியோர் முன்னிலையில் ஒரு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்து சாட்சிகள் இருவரிடம் கையொப்பம் பெற்று அவர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார். மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் முறையே அசா.ஆ.3 மற்றும் அசா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி சம்பவ சாட்சிகள் ராஜசேகர், மோகன், ராஜி ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார். வழக்கின் சம்பவத்தை உறுதிபடுத்திக்கொண்டு வழக்கின் எதிரிகளை தேடிப்பார்த்ததில் எதிரி பத்திரக்கோட்டை பஸ்டாப் அருகே நின்ருந்த தவமணியை காரணம் கூறி கைது செய்து தகவலை உறவினருக்கு தெரியப்படுத்தியும் 12.30 மணிக்கு எதிரியை நிலையம் கொண்டுவந்து திரேக சோதனை செய்து பாரா காவல் வசம் ஒப்டைக்கப்பட்டது. இவ்வழக்கின் தக்க வழிக்காவல் மூலம் கனம் JM-1 நீதிமன்றம் அவர்களிடம் அடைப்புக்காவலில் அனுப்பி வைக்கப்பட்டது. பின்னர் இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் பாஸ்கரன் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார். பின்னர் வழக்கின் கோப்பினை பார்வையிட்டு ஆஜர் எதிரிக்கு எதிராக சட்டப்பிரிவுகள் 341, 294(b), 352, 506(2) இதசவின் படியும், குற்றயிறுதியறிக்கை தயார் செய்து தாக்கல் செய்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.</u>**

இந்த சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாதுஎன்றாலும் நான் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். அ.சா.1 கொடுத் தபொய்யான புகாரை பெற்று எதிரிக்கு எதிராக ஒரு தவறான முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்தும் சம்பவ இடம்செல்லாமலும் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமலும் வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார்செய்து எதிரிக்கு எதிராக ஒரு தவறான இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.